**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | நேஹா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 14/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2873 of the day of **28.03.2022**

நீதிமன்ற கேள்வி : இது எந்த இடம் என்று தெரியுமா?

பதில் : கோர்ட்

கேள்வி : அங்கு வருவபவர் யார்?

பதில் : போலிஸ்

கேள்வி : உண்மை எது பொய் எது என்று எனக்குத் தெரியுமா?

பதில் : தெரியும்

கேள்வி : உண்மை என்றால் என்ன?

பதில் :நல்லதைச் சொல்வது

கேள்வி : பொய் என்றால் ?

பதில் : கெட்டதைச் சொல்வது

கேள்வி : இங்கு எதற்கு வந்துள்ளாய்?

பதில் : எனது அம்மா இறந்தது பற்றி சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

சாட்சி கேள்விகளை புரிந்து கொண்டு பதில் சொல்லியதால் அவர் சாட்சியம் அளிக்க தகுதியான நபர் என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது உத்தமபாளையயத்தில் இருந்து வருகிறேன். நான் 9ம் வகுப்புபடிக்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எனது விசு சித்தப்பா. 2015 அனறு நாங்கள் மதுரையில் குடியிருந்தோம். அப்போது நான் 3ம் வகுப்பு படித்தேன். எனது தங்கை LKG படித்துக்கொண்டிருந்தார். நாங்கள் ஒரே பள்ளியில் படித்தோம். மரியா என்ற பள்ளியில் படித்தோம். 31 அன்று ஜுலை மாதம், 2015 அன்று சாயங்காலம் வந்தோம். பள்ளிக்கு அப்பாவோடு காலை 08.00 மணிக்கு சென்றுவிடுவோம். திரும்பி மாலை 05.00 மணிக்கு நான் வருவேன். எனது தங்கை மதியம் 12.30 மணிக்கு வந்துவிடுவார். நாங்கள் வந்போது கூட்டமாக இருந்தது. தங்கச்சி பக்கத்து வீட்டில் இருந்தார். நான் கேட்டபோது, அம்மாவிற்கு உடம்பு சரியில்லைனு அப்பா ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றிருப்பதாக சொன்னார். அப்புறம் நான் பக்கத்து வீட்டிலேயே இருந்துகிட்டேன். கொஞ்ச நேரம் கழித்து அப்பா வந்து தங்கையிடம் வீட்டிற்கு யார் வந்தார்கள் என்று கேட்டார். விசு சித்தாப்பாவும் அவரது பிரண்டும் வந்தார்கள் அன்றைய தினம் வந்ததாக எனது தங்கை சொன்னார். அதற்கு அடுத்து கேட்டுவிட்டு அப்பா திரும்ப சென்றுவிட்டார். அடுத்து நாங்கள் எங்கள் அத்தை நித்யா கூடவே இருந்தோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் கு.வி.**

அன்று சாயங்காலம் நான் வேனில் வருவேன். பொதுவாக அப்பா காலையில் கொண்டு சென்று விடுவார். நான் மாலையில் வேனில் வந்துவிடுவேன். சாயங்காலம் நான் வந்தபோது எங்கள் வீட்டில் கூட்டமாக இருந்தது. அப்போது போலிசார் இருந்தார்கள் என்றால் அப்போது இல்லை. போலிசார் அன்று சாயங்காலம் வந்தார்கள். நேரம் தெரியவில்லை. போலிசார் வந்த பிறகு எங்கள் வீட்டை பூட்டி சீல்வைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் வீட்டிற்கே போகவில்லை. நான் கீழேயே இருந்தேன். கீழே ஒரு ஆண்டி வீட்டில் இருந்தேன், அவர் பெயர் தெரியவில்லை. எங்களைப்பார்க்க எனது

அப்பாவின் தாத்தா பாட்டியோ, எனது அம்மாவின் தாத்தா பாட்டியோ அடிக்கடி வருவார்கள். அதே போல் நான், எனது அப்பா, அம்மா., தங்கை ஆகியோர் விசு சித்தப்பா வீட்டிற்கு அடிக்கடி போவோம் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று இரவு நாங்கள் எங்கு தூங்கினோம் என்றால் வேறு இடத்திற்கு சென்றுவிட்டோம். வேறு இடம் என்றால் நித்யா அத்தை வீட்டிற்கு சென்றோம். நித்யா அத்தை எனக்கு எப்படி உறவு என்றால் அம்மாவின் அண்ணன் wife ஆவார். எனது மாமாவின் பெயர் அசோக். அவர் வீடு எங்கு இருக்கிறது என்று தெரியாது. அசோக் மாமா எனது அம்மா உடன் பிறந்தவர். அசோக் மாமா அப்போது ஆர்மியில் வேலை பார்த்தார். இப்போது ரிட்டயர்டு ஆகிவிட்டார். எனது மாமா, அத்தை ஆகியோருடன் தான் நானும் எனது தங்கையும், சம்பவ தினத்தில் இரவு இருந்தோம். மாமா எனது அம்மா இறந்ததற்கு போகவில்லை என்றால் சரியல்ல. அப்பா என்னை யார் வீட்டில் இருந்தபோது பார்த்தார் என்றால் நாங்கள் கீழ் வீட்டில் இருந்த ஆண்டி வீட்டில் இருந்த போது பார்த்தார். அப்பா எங்களை பார்த்தபோது இருட்டாக இருந்தது நேரம் தெரியவில்லை. அப்பா மட்டும் தான் வந்தார். எனது அப்பா கூட போலிசார் யாரும் வரவில்லை. எனது அப்பா வந்தபோது, கீழே போலிசார் மற்றும் ஆட்கள் கூட்டமாக இருந்தார்கள். நான் எனது அம்மாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு போகவில்லை. உண்மையில் நானும்ய எனது தங்கையும் எனது அம்மாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு விசு சித்தப்பா தான் கூட்டிச் சென்றார் என்றால் சரியல்ல. மறுநாள் காலையில் தான் பார்த்தோம். மறுநாள் காலை யார் என்னை கூட்டிச் சென்றார்கள் என்று தெரியவில்லை. எங்களை கூட்டிச் சென்றது ஆணா, பெண்ணா என்று தெரியவில்லை. என்னை யாரோ ஒருவர் வந்து கூப்பிட்டால் சென்றுவிடுவேனா என்றால் போகமாட்டேன். யாரோ தெரியாத நபரோடு நான் போகமாட்டேன். எனக்கு ராஜலெட்சுமி பாட்டியையும், நாகராஜன் தாத்தாவையும் தெரியும். நாகராஜன் தாத்தா மில்ட்ரியில்இருந்து ரிட்டயர்டு ஆனவர் என்று தெரியாது. விசு சித்தப்பாவின் அப்பா தான் நாகராஜன் என்றால் சரிதான். நாகராஜன் ஒரு Ex-service Man என்றும் அவரிடம்

போதுமான பணம் இருந்தது என்றும் அதனால் எனது அம்மாவை எதுவும் செய்யவேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றால் அவங்கதான் கொன்னாங்க. அவங்க தான் கொன்னாங்க என்று அப்பா தான் சொன்னார். எனது அப்பாவை போலிசார் அடித்து துன்புறுத்தியதாக எனது அப்பா என்னிடம் சொல்லவில்லை. என் அப்பா தாத்தா, பாட்டி மற்றும் அம்மாவின் தாத்தா, பாட்டி ஆகியோர் சம்பவ தினத்தில் எங்கு தங்கியிருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடன் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. எனது மாமா வீட்டிற்கு தாத்தா பாட்டிகள் வந்தார்களா என்றால் தெரியவில்லை. எனது அப்பா எப்போது ஆபிஸ் போய்விட்டு, எப்போது திரும்ப வருவார் என்றால் நேரம் எனக்குத் தெரியாது. அப்பா வெளியே சாப்பிடமாட்டார். லஞ்ச் வீட்டில் தான் வந்து சாப்பிடுவார். விசு சித்தப்பா அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார். எனது அம்மா விசு சித்தப்பாவிடம் பிரியமாக இருப்பார் என்றால் சரிதான். யார் வந்தாலும் அப்படித்தான் கேட்பார்கள். அப்பாவின் டியர் பிரண்டு செந்தில்குமார் எங்கள் வீட்டிற்கு வருவார் என்று எனக்குத் தெரியாது. விசு சித்தப்பா வருவார் என்பதை எனது அப்பா சொல்லித்தான் தெரியும் என்றால் இல்லை. எனக்கே தெரியும். விசு சித்தப்பா எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார் என்று எனக்கு எப்படித் தெரியும் என்றால் லீவு நாளில் வருவார். எங்கள் ஸ்கூல் வேன் டிரைவர் பெயர் தெரியாது. ஸ்கூல் வேனில் எத்தனை வருடமாக போகிறேன் என்றால் எனக்குத் தெரியாது. உண்மையில் நான் ஸ்கூல் வேனில் வரவில்லை என்றும் எனது அப்பா தான் கூட்டிவந்தார் என்றால் சரியல்ல. ஸ்கூல் வேன் எந்த வகையான வேன் என்றால் தெரியாது. நர்மலாக இருக்கும், வேன் பஸ் மாதிரி இருக்காது. உண்மையிலேயே நான் வேனிலேயே போகவில்லை என்பதால் தான் என்னால் வேனைப்பற்றி சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல.

நான் தற்போது சொல்லும் விபரங்கள் எனது அப்பா சொல்லிக்கொடுத்து சொல்ல சொன்னார் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 9** |
| **Name** | : | திரு. ஆண்டவர் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2873 of the day of **28.03.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் கோம்பையில் குடியிருந்து வருகிறேன். எனது மகள் கௌரி. வெங்கடேசன் என்பவருக்கு எனது மகளை திருமணம் செய்து கொடுத்தேன். வெங்கடேஷ் எனது அக்கா மகன். ஆஜர் எதிரி எனது தங்கை மகன். பழங்காநத்தத்திற்கு பக்கத்தில் எனது மகளும், மருமகனும் பிள்ளைகளுடன் குடியிருந்தார்கள். அவர்கள் நல்லாவே சந்தோஷமாக இருந்தார்கள். வெங்கடேசன் இன்ஞினியர் வேலை பார்த்து வருகிறார். எனது மகள் B.Ed படிக்க வைத்து வேலைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். சந்தோஷமாக இருந்தார்கள். அடிக்கடி நானும் எனது சம்சாரமும் வந்து பார்ப்போம். எனது மகளுக்கு நேஹா, ஸ்வந்திகா என்ற இரு பெண் குழந்தைகள் இருந்தார்கள். என் பிள்ளை நல்லமுறையில் இருந்தார். எனது மகளுக்கு போன் போட்டேன். அதற்கு பிற்பாடு எப்போதும்போல் எப்படி இருக்கிறிர்கள் என்று சம்பவ நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு போன் போட்டு விசாரித்தேன். என்னிடமும், அவரது அம்மாவிடமும் எனது மகள் கௌரி பேசினார். பேசும்போது, எனகக்கு விசுவும், அவரது கூட்டாளியும் மதியம்போல மதியம்போல வந்து தொந்தரவு தருகிறார்கள் என்று சொன்னார். அப்போது

நாங்கள், இந்த விஷயத்தை நீ சொல்லும்போது எனக்கு மனசு வேதனையாக உள்ளது. இதை நீ எனது மருமகன் வெங்கடேசனிடம் சொல்லி கண்டீசன் செய்ய சொல்லி சொன்னேன். அதற்கு பிற்பாடு, வெங்கடேசனும் விசுவையும், அந்த பையலையும் கண்டீசன் செய்துள்ளார். அதற்கு பிறகு நான் எதுவும் செய்யவில்லை. எனது மகள் இறப்பதற்கு முதல் நாள் மதியம் 01.00 மணிக்கு நான் எனது மகளுக்கு போன் போட்டேன். என்ன செய்கிறீர்கள், ஏது செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எனது மகள், சின்ன பிள்ள ஸ்கூல் போய்டு வந்துடுச்சு, பெரிய புள்ள சாயந்தரம் தான் வரும், சமயல் இப்போது தான் செய்தேன் என்று சொன்னார். மருமகன் எங்கே என்று கேட்டேன். இப்போது தான் போகிறார். அன்று நேரம் ஆகிதான் போகிறார் என்று சொன்னார். சரிப்பா நீ பிள்ளைகளுக்கு சாப்பாடு குடு அப்புறம் பேசுகிறேன் என்று சொல்லிவைத்துவிட்டேன். அன்றைய தினமம் சாயங்காலம் 04.30 டு 05.00 மணிக்குள் எனது சம்மந்ததாரர் செல்லத்துரை என்கரு போன் போட்டு, ஆண்டவரு, கௌரியைக் கொன்டுட்டு நகை நட்டை எல்லாம் எடுத்துட்டு போய்ட்டாங்க ஆண்டவரு என்று சொன்னார். என்னங்க இப்படி சொல்றீங்க, இப்பதான் 1 மணிக்கு போன் போட்டு என் மக கிட்ட பேசினேன் என்று சொன்னேன். ஆமா, இப்பத்தான் வெங்கடேசு எனக்கு போன் போட்டு சொன்னாப்ல என்று சொன்னார். ஒரு வண்டியைப் பிடிச்சு நர்னும், எனது மனைவி, எனது மைத்துனர், அவரது மனைவி நான்கு பேரும் எனது மகள் இறந்த அன்று இரவு மருத்துவமனை வந்தோம்., 2015 ம் வருடம் 7 ம் மாதம் தேதி ஞாபகம் இல்லை. நான் மதியம் போன் செய்து எனது மகளிடம் பேசிய அன்றைய தினமே எனது மகளை கொன்றுவிட்டார்கள். எனது மகள் என்னிடம் பேசியது தான் கடைசி. சாயங்காலம் தான் தகவல் சொன்னார்கள். ஆஸ்பத்திரிக்கு வந்தபோது இருட்டாகிவிட்டது. ஆஸ்பத்திரிக்கு வெளியே எனது மருமகன் வெங்கடேஷ் அழுதுகொண்டிருந்தார். அப்போது நான் போய் என்னங்க, எங்கங்க கௌரிய என்று கேட்டோம். அவர் காரில் கௌரியைக் காண்பித்தார். (சாட்சி தலையில் அடித்துக்கொண்டு அழுது கொண்டே சாட்சியம் அளிக்கிறார்.), எனது

சம்மந்தாாரர் நீங்களும் வெங்கடேசும் சென்று போலிசில் கம்பளேண்டு செய்யுங்க என்று என்னிடம் சொன்னார். நாங்கள் SS காலனி சென்று கம்பளெண்டு செய்து விட்டோம். எனது மருமகன் வெங்கடேஷ் complaint கொடுத்தார். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அசா1 ல் உள்ள சாட்சி கையெழுத்து **அதசாஆ.6 ஆகும்.** பாடியைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். நானும் எனது சொந்தபந்தமும், மருமகனும் எனது மகள் வீட்டிற்கு போனோம். எனது பேத்திகள் இருவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள் கூப்பிட்டு வைத்திருந்தார்கள். எனது சின்ன பேத்தியிடம் கேட்டேன், யார் பாப்பா வந்தது என்று கேட்டேன், விசு சித்தப்பாவும், ஒரு அங்கிலும் வந்தார்கள் வீட்டிற்கு என்று சொன்னார். பக்கத்து வீட்டுகார பெண்கள் இருந்தவர்களும் இருவரும் அடிக்கடி வருவார்கள் என்று சொன்னார்கள். அப்புறம் இந்த பிள்ளைகளை எனது மருமகள் நித்யா சொக்கலிங்கநகரில் இருக்கிறார் அவரை போன் போட்டு வர வைத்திருந்தேன். வந்து பிள்ளைகள் இரண்டுபேரையும் பார்த்துக்கோப்பா, நான் ஆஸ்பத்திரிக்கு போறேன் என்று ஒப்படைத்துவிட்டு போனேன். நான் ஆஸ்பத்திரிக்கு வந்த உடன், எனது மனைவி என்னிடம் கேட்டடார். நான் எனது மனைவியிடம், விசுவும் அவரது கூட்டாளியும் தான் இதை செய்திருக்கிறார்கள் என்று சொன்னேன். காலையில்தான் வெங்கடேஷ் வந்தார்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

மருத்துவமனையில் இருந்து, நான், என்னுடன் வந்தவர்கள், வெங்கடேசன் ஆகியோர் வெங்கடேசன் வீட்டிற்கு சென்ற விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு தொடர்ச்சியாக எனது மகளுக்கு போன் செய்தேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு தொடர்ச்சியாக நான் போன் செய்யவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு எனது மகளுக்கு போன் செய்த விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது மகள், விசு வந்து தொந்தரவு

செய்கிறார் என்று என்னிடம் சொன்ன விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். இது சம்பந்தமாக சொந்த பந்தத்திடம் சொல்லி பஞ்சாயத்து பேசச் சொன்ன விபரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் பஞ்சாயத்து செய்யவில்லை, எனது மருமகனிடம் சொல்லி, கண்டீசன் செய்ய சொன்னதை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில், எனது மகள் இறப்பதற்கு முந்தைய நாள் ஒரு மணிக்கு போன் செய்த விபரத்தை சொல்லியுள்ளேன். சம்பவ சமய்ததில் எனது மகன் அசோக் ஆர்மியில் இருந்தார். சம்பவத்தன்று வரவில்லை. எனது மகன் மறுநாள் அடக்கம் பண்ண வந்தார். எனது மகன் மில்ட்ரியில் ஜம்மூ காஷ்மிரில் இருந்தார். ஜம்முகாஷ்மிரில் இருந்து பிளைட்டில் வந்தார். ஜம்மு காஷ்மிரில் எந்த இடத்தில் பணியில் இருந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அசோக் குமாருக்கு வழக்கு சம்பந்தமாக நான் சொல்லித்தான் விபரம் தெரியும் என்றால் என் மகள் இறந்ததை நான் தான் சொன்னேன். நான் குவாரியில் கல் உடைக்கும் வேலை செய்கிறேன். போலிசார் விசாரிக்கும் போது, நாங்கள் எல்லாம் ஊரில் இருந்து வந்த பிறகு தான் எனது மகளின் உடம்பை அரசு மருத்துவமனை கொண்டு சென்றோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் கம்ப்ளெண்ட் கொடுத்த பிறகு தான் கொண்டு சென்றோம். எனது மகளும், மருமகனும் ஒருவருக்கு ஒருவர் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். காதலுக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. எனது அக்கா பாக்கியும் நானும் 25 வருடமாக பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரியல்ல. 2 வருடங்களாகத் தான் பேசிக்கொள்ள மாட்டோம். எதற்காக 2 வருடங்களாக பேசமாட்டோம் என்றால் சொந்தபந்தத்திற்குள் மனஸ்தாபத்தினால் பேசிக்கொள்ளமாட்டோம். வெங்கடேசின் கடைசித்தம்பி முத்துக்குமார். அவரது திருமணத்திற்கு எனது மகளும் மருமகனும் செல்லவில்லை என்றால் பத்திரிக்கையில் பெயர் போடாததால் அவர்கள் வரவில்லை. எனது மருமகன் மதுரைக்கு வந்த பிறகு 2,3 வீடுகள் மாறியிருக்கிறார். 2,3 வீடுகள் மாறும்போது எல்லாம் நான் தான் உதவி செய்தேன். தற்போது குடியிருக்கும்

வீட்டிற்கும் நான் தான் உதவி செய்தேன். அந்த வீட்டிற்கு நான் அடிக்கடி போவேன் என்றால் என் மகள் வீட்டிற்கு அடிக்கடி போவேன். அந்த வீட்டில் மொத்தம் எத்தனை வீடு உள்ளது என்றால் எனது மகள் வீடு மட்டும் தான் தெரியும். கடைசியாக உள்ளது. எனது மகள் குடியிருக்கும் வீட்டில் எத்தனை வீடுகள் உள்ளது என்று நான் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எனது மகள் குடியிருந்த தெருவின் பெயர் எனக்குத் தெரியாது. 6,7 வருடங்களாகிவிட்டது. எனது மருமகன் குடியிருந்த வீட்டின் பெயர் தெரியாது. எனது மகள் வீடு எந்த திசை பார்த்த வீடு என்றால் வடக்கு பார்த்த வீடு. எத்தனை ரூம் உள்ளது என்றால் ஹால் ஒன்று, ரூம் ஒன்று உள்ளது. எனது மகள் இறந்த அன்று, எனது பேத்திகள் எனது மருமகள் நித்யா வீட்டில் இருந்தார்கள், நான் தான் விட்டேன். ஆஸ்பத்திரியில் இருந்து நான் போகும் போது எனது பேத்திகள் பக்கத்து வீட்டில் இருந்தார்கள். எனது மருமகளை வரச்சொல்லியிருந்தேன். வந்துவிட்டார். பக்கத்து வீடு என்றால் மாடியில் இருந்தார்கள். எனது மகளை திருமணம் செய்யும்போது வெங்கடேசன் எங்கு வேலை பார்த்தார் என்று தெரியாது. சிவில் engineer ஆக இருந்தார். civil engineer என்றால் வருடம் முழுவதும் வேலை இருக்காது என்றால் எனக்குத் தெரியாது. எனது மருமகன் வசதியாக இருந்ததால் மாதாமாதம் எனக்கு பணம் அனுப்புவார் என்றால் அனுப்பமாட்டார். மதுரை மீனாட்சி மருத்துவமனையில் எனக்கு ஆப்ரேசன் செய்யவில்லை. எனது மைத்துனருக்கு ஆப்ரேசன் செய்தார்கள். ஆப்ரேசன் முடிந்து எனது மைத்துனர் அவரது மகன் வீட்டில் இருந்தார். அவரது மகன் தான் வெங்கடேஷ். எனது மனைவிக்கு கர்ப்பபை ஆபரேசன் செய்தார்களா என்றால் செய்யவில்லை. எனது மகளுக்கு இரண்டாவது மகள் கோம்பையில் வைத்து பிறந்தது. ஆஸ்பத்திரி பெயர் ஞாபகம் இல்லை. இரண்டாவது பிரசவத்தின் போது, எனது மருமகனுக்கும், மகளுக்கும் சண்டை ஏற்பட்டு, எனது மகளை மருமகன் அடித்து விரட்டிவிட்டார் என்றால் சரியல்ல. அப்படி எனது மருமகன் விரட்டி விடும் போது, எனது மகள் விசுவநாதன் வீட்டில் 15 நாட்கள் இருந்தார் என்றால் சரியல்ல. ஏதாவது விஷேசம் இருந்தால் தான்

போவார். எப்போதும் போகமாட்டார். வெங்கடேசனின் தம்பி முத்துக்குமார் திருமணத்திற்கு எங்கள் குடும்பத்தார் யாரும் போகவில்லை. அந்த திருமணத்தின் போது வெங்கடேசனுக்கும் எனது மகளுக்கும் கடுமையான சண்டை ஏற்பட்டு, வெங்கடேசன் தேங்காயைக் கொண்டு எனது மகள் மீது எறிந்ததில் எனது மகளுக்கு தலையில் 10 தையல்கள் போடப்பட்டது என்றால் சரியல்ல. வெங்கடேசன் எனது மகளை அடித்து காயப்படுத்திவிட்டார் என்ற கோவத்தில் தான் நாங்கள் அந்த திருமணத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் என்னிடம் போனில் பேசிய ரெக்காடுகளை போலிசார் எடுத்தார்கள். எத்தனை நாளுக்குரிய ரெக்காட்டுகளை கொடுத்தேன் என்றால் நான் போனைக் கொடுத்துவிட்டேன், பார்த்து எடுத்துக்கொண்டார்கள். அன்னைக்கு நடந்த சம்பவத்தைத்தான் எடுத்துக்கொண்டார்கள். எனது மருமகன் எனது மகள் மீது சந்தேகம் கொண்டு துன்புறுத்திவந்தார் என்றால் சரியல்ல. எனது மகள் இறப்பு குறித்து, எனது மருமகன் எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. எனது சம்பந்தகாரர் தான் தகவல் சொன்னார். அவர் ஆஸ்பத்திரியில் இருந்தார். எனது மகளுக்கும், மருமகனுக்கும் சண்டை என்றும், நான் சந்தேகப்பட்டு போலிஸ்க்கு போய் விடுவேன் என்பதால் தான் மருமகன் எனக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது சம்பந்தகாரர் எனக்கு தகவல் சொன்னவுடனே போலிசுக்கு புகார் கொடுக்க சொல்லவில்லை. கொலை செய்தது எனது மருமகன் என்று எனக்குத் தெரியும் என்பதால் நான் போலீசுக்கு புகார் கொடுக்கவில்லை என்றால் எனது மருமகன் கொலை செய்யமாட்டார். மதுரை GH க்கு சாயங்காலமே வந்துவிட்டோம். பாடியை உள்ளே கொண்டு போக முயற்சி செய்தோமா என்றால் போலீசுக்கு கம்ப்ளெயின்ட் கொடுத்துவிட்டு அதன் பிறகு கொண்டு சென்றோம். எனது மகளை மருத்துவமனைக்கு கொண்டுவந்த உடனேயே உள்ளே கொண்டுபோக முயற்சி செய்யவில்லை. எந்த வாகனத்தில் இருந்து நான், எனது சம்பந்தகாரர், வெங்கடேஷ் ஆகியோர் வெங்கடேசன் வீட்டிற்கு சென்றோம் என்றால் ஆட்டோவில் சென்றோம். காவல்நிலையத்திற்கு நானும் வெங்கடேசனும் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் ஆட்டோவில்

சென்றோம். நான் எனது மருமகன் வீட்டிற்கு செல்லும்போது இரவு எத்தனை மணி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் சென்றபோது, போலிசார், மோப்ப நாய்கள் இருந்ததா என்றால் போலிசார் இருந்தார்கள். GH ல் எனது அக்கா பாக்கியம், டேய், வெங்கடேஷ் அடிச்சதா சொல்லாதடா, சொன்னா வெங்கடேசை போலிஸ் பிடிச்சுடுவாங்க என்று என்னிடம் சொல்லவில்லை. வெங்கடேஷ் தான் எனது மகளை அடித்ததாக சொன்னார்கள் என்றும் அதன் பிறகு சமாதானம் ஆகி போலிசில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. கோம்பைக்கு அடுத்துதான் பாளையம் உள்ளது. கோம்பையில் இருந்து கார்பிடிச்சு வந்தோம். நான் எனது மனைவி, எனது மச்சான், அவரது மனைவி ஆகியோர் வந்தோம். கோம்பையில் நானும் எனது மனைவியும், வந்தோம். உத்தமபாளையத்தில் எனது மச்சானையும் அவரது மனைவியையும் ஏற்றிவந்தோம். நாங்கள் வந்த வண்டி எத்தனை பேர் உட்காரக்கூடிய வண்டி என்றால் 5 பேர் உட்காரும் வண்டி. கோம்பையில் இருந்து பாளையம் வரும்போது எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் தெரியவில்லை. நான் ஏன் கல் உடைக்கும் வேலை செய்கிறேன் என்றால் நான் எனது அப்பா, எனது தாத்தா ஆகியோர் கல் உடைக்கும் வேலை செய்தார்கள், திருமணத்திற்கு எனது மகளுக்கு எவ்வளவு சீர் வரிசை செய்தோம் என்றால் சொந்தபந்தத்திற்குள் திருமணம் செய்ததால் கணக்கு பார்க்கவில்லை. எனது முதல் பேத்தி கோம்பையில் பிறந்தார். இரண்டாவது பேத்தியும் கோம்பையில் தான் பிறந்தார். எனது மகளுக்கு பிரசவம் சிசேரியன் என்றால் சரிதான். மதுரையில் தான் பிரசவம் நடந்தது என்றால் சரியல்ல. விசுவநாதன் வீட்டில் தான் பிரசவம் நடந்தது என்றால் சரியல்ல. எனது பேத்திகளுக்கு எவ்வளவு சீர் செய்தேன் என்றால் எனக்குத் தெரியாது. நாங்கள்ஒன்றுக்குள் ஒன்று. எனக்கும் வெங்கடேசனுக்கும் ஆகாது என்பதால் நான் சீர்வரிசை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது சொன்ன விபரங்கள் அனைத்தும் எனது மருமகன் வெங்கடேசன் சொல்லித்தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மருமகன் கைது பற்றி அனைத்து செய்தி தாள்களிலும் செய்தி வந்தது என்றால் எனக்குத் தெரியாது. எனது

மகன் மில்ட்டிரியில் பெரிய ஆபிரசாக உள்ளதால், பொய்யாக விசுவநாதனை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 10** |
| **Name** | : | **திரு. செல்லத்துரை** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2873 of the day of **28.03.2022**

**முதல் விசாரணை :**

நான் உத்தமபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது மகன். எனது மகனுக்கும், கௌரி என்பவருக்கும் திருமணம் நடந்தது. அசா9 எனது சம்பந்ததாரர். சுமார் 6 1/2 வருடங்களுக்கு முன்பு, மதிய நேரத்தில் 4.30 மணிக்கு வெங்கடேஷ் எனக்கு போன் செய்தார். அப்பா, கௌரிய யாரோ கொலை செய்துவிட்டு, நகையைப் பூரா அத்துபோய்விட்டார்கள் என்று சொன்னார். யாருப்பா என்று கேட்டேன். யார் என்று தெரியவில்லை என்று சொன்னார். நான் உடனே அசா9 எனது சம்பந்ததாரருக்கு போன் செய்து சொன்னேன். கோம்பையில் இருந்து, எனது சம்பந்ததாரர் கார்எடுத்துக்கொண்டு, எங்களையும் கூட்டிக்கொண்டு மதுரைக்கு வந்தோம். மதுரைக்கு அரசு மருத்துவமனைக்கு சாய்ங்காலம் 6.30, 07.00 மணிக்கு வந்தோம். GH க்கு வெளியில் கார் பக்கத்தில் எனது மகன் அழுது கொண்டிருந்தார். எங்கப்பா கௌரி என்று காட்டினார். என் மருமகள் கௌரி காருக்குள் தூங்க படி இருந்தார். (சாட்சி அழுது கொண்ட சொல்கிறார்.) நான் எனது மகனிடம் போலிசுக்கு சொல்லலியா என்று கேட்டேன், இல்லைப்பா எனக்கு கையும் ஓடல காலும் ஓடலன்னு சொன்னார். அதன் பிறகு அசா9 ம்

எனது மகனும் காவல்நிலயத்திற்கு போனார்கள். கொஞ்ச நேரத்தில் போலிஸ் வந்தார்கள். வெளியில் இருந்த பாடியை வரண்டாவிற்கு கொண்டு போக சொன்னார்கள். 2 ஆட்கள் வைத்து கொண்டு போனார்கள். உள்ளே கொண்டு போனதும், நர்சுகள் எனது மருமகளின் காலில் இருந்த கொலுசு, கையில் இருந்த வளையல் போன்றவற்றை என்னிடம் கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மறுபடி எனது மகன் இருந்த விட்டிற்கு சென்றோம். கீழே கூட்டமாக இருந்தது. எனது சம்பந்ததாரர் எனது பேத்திகளிடம் பேசிக்கொண்டிருந்தார். என்னால் தாங்கமுடியவில்லை. நான் ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. கையெழுத்து மட்டும் என்னிடம் ஆஸ்பத்திரியில் வாங்கினார்கள். போட்டேன்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான், எனது சம்பந்தகாரர் எல்லோரும் எனது மகன் வீட்டிற்கு சென்ற விபரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசார் அங்கேயே தான் இருந்தார்கள். நான் GH வந்த பிறகு எனது மகனிடம் போலிசுக்கு தகவல் சொன்னியா என்று கேட்டேன். போலிசுக்கு தகவல் சொல்லியாச்சு என்று சொன்னார். அதன் பிறகு போலிசார் வந்து தான் பாடியை உள்ளே கொண்டு சென்றோம். எனக்கு எனது மகன் போன் செய்த போது எனது மகனிடம் போலிசுக்கு தகவல் சொல்லச்சொல்லி சொன்னேனா என்றால் பதட்டத்தில் இருந்தேன். நானும் எனது மருமகளும் எத்தனை வருடம் பேசமாட்டோம் என்றால் பேசிக்கொண்டு தான் இருந்தோம். எனது கடைசி மகன் பெயர் முத்துக்குமார். முத்துக்குமார் கல்யாணத்திற்கு வெங்கடேசனும் கௌரியும் வரவில்லை. நாங்கள் ஒன்றுமையாக பேசிக்கொண்டிருந்தபோது ஏன் எனது மகனும், மருமகளும் வரவில்லை என்றால் பத்திரிக்கையில் பேர் பிரச்சனை இருந்ததால் வரவில்லை. கௌரியின் அம்மா, அப்பாவும் வரவில்லை. எங்களக்கும் கௌரியின் வீட்டிற்கும் இடையே உறவு முறை சரியாக இல்லாமல் இருந்ததால் தான்

திருமணத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வெங்கடேசன் வீட்டிற்கு நான் அடிக்கடி போவேன் என்றால் போக மாட்டேன், ஆறுமாதத்திற்கு ஒரு முறை பிள்ளைகளைப் பார்க்கப்போவேன். நான் போனால் மருமகள் என்னை மதிக்கமாட்டடார் என்றால் சரியல்ல. எனது மருமகள் என்னிடம் பாசமாக இருப்பார். எனது மருமகள் குடியிருந்த பகுதியின் பெயர் பழங்காநத்தம் பகுதியில் இருந்தார்கள். சம்பவத்தன்று இரவு நான் எங்கு தங்கினேன் என்றால் GH ல் தான் விடிய விடிய இருந்தோம். என்னுடன் GH ல் எனது மனைவி, எனது பெரிய மகன், சின்ன மகன் இருந்தார்கள். வெங்கடேஷ் எங்கு இருந்தார் என்று தெரியாது. வெங்கடேஷ் காவல்நிலயத்தில் இருந்தாரா வீட்டில் இருந்தாரா என்று தெரியாது. நான் எனது மகன் வீட்டிற்கு சென்றபோது, வெங்கடேஷ் எங்களுடன் வந்தார். வெங்கடேஷ் வீட்டிற்கு செல்லும்போது யார் யார் எல்லாம் சென்றோம் என்றால் நானும் எனது சம்பந்ததாரரும் போனோம். ஆட்டோவில் போனோம். வெங்கடேஷ் குடியிருந்த வீடு காம்பவுண்டு வீடு என்றால் சரிதான். கீழே மூன்று வீடு, மேலே மூன்று வீடு, மேலே கடைசி வீட்டில் வெங்கடேஷ் இருந்தார். விஸ்வநாதனின் அப்பா மில்டரியில் ஓய்வு பெற்ற அதிகாரி. மிகவும் ஒழுக்கமானவர் என்றால் சரிதான். அவர்களிடம் போதிய பணம் இருந்தது என்றால் சரியல்ல. அவருக்கு பென்சன் வரும். விஸ்வநாதனின் மாமா பெரிய சிவில் இன்ஞினியர் என்றால் தெரியாது. நான் சொல்வது போல் எதிரி போதிய பணம் இருந்தது என்றும், வெங்கடேஷ் தான் எதிரியிடம் பணம் வாங்கி மோசடி செய்து விட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் வழக்கமாக வீட்டில் தான் சாப்பிடுவார். தோராயமாக எத்தனை மணிக்கு சாப்பிட வருவார் என்று சொல்லமுடியாது. எனது மகன் போன் செய்த விபரங்களை

போலிசார் என்னை விசாரணை செய்த போது சொன்னேனா என்றால் போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 11** |
| **Name** | : | திருமதி. ஈஸ்வரி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2873 of the day of **28.03.2022**

**முதல் விசாரணை :**

நான் கோம்பையில் குடியிருந்து வருகிறேன். எனது மகள் கௌரி இந்த வழக்கில் இறந்தநபர் ஆவார். எனது மகளுக்கு பாளையத்தில் உள்ள வெங்கடேஷ் என்பவருடன் திருமணம் செய்து கொடுத்தோம். வெங்கடேஷ் எனது கணவரின் அக்கா மகன் ஆவார். எனது மகளுக்கும், வெங்கடேஷ்க்கும் இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். மதுரையில் பழங்காநத்தத்திற்கு பக்கத்தில் குடியிருந்தார்கள். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்த தினத்தில் மதியம் எனது மகள் எங்களிடம் பேசினார். (சாட்சி அழுது கொண்டே பேச முடியாமல் சாட்சியம் அளிக்கிறார்), பாப்பா வந்துடுச்சா என்று கேட்டோம், சின்ன பாப்பா வந்திடுச்சு என்று சொன்னார். மாப்பிள்ளை வீட்டில் இருக்கிறாரா என்று கேட்டோம். மாமா வெளியே போய்ட்டாங்க என்று சொன்னார். நான் சாப்பாடு ஆக்கிக்கிட்டு இருகிகேன் , குட்டி பாப்பாவுக்கு சோறு ஊட்ட போறேன்மா என்று சொன்னார். பெரிய பாப்பா சாயங்காலம் தான் வரும் என்று சொன்னார். விருந்தாள் வந்திருந்ததால் நான் போனை வைத்துவிட்டேன். சாயங்காலம்போல எனது சம்பந்தகாரர் எங்களுக்கு போன் போட்டார். யாரோ கௌரியை கொன்றுபோட்டு, நகையை எல்லாம்

புடுங்கிட்டு போய்யிட்டாங்க என்று சொன்னார். பாளையத்திற்கு வண்டி பிடித்து சென்று, மதுரைக்கு GH க்கு வந்தோம். GH க்கு வந்த போது மருமகன் புணத்திற்கு கிட்ட இருந்தார். அப்படியே கத்தி கதறி அழுதுகிட்டு இருந்தோம். எங்கள் வீட்டு காரரும், சம்பந்தகாரரும் பிள்ளைகளைக் காணாமோ என்று பார்க்க போனார்கள். பக்கத்து வீட்டுகாரர்கள் பிள்ளைகளை பிடித்து வைத்திருந்தார்கள். சின்னபிள்ளையிடம் யார் வந்தாங்க என்ன நடந்துச்சு என்று எனது கணவர் கேட்டாடர். விசு சித்தப்பாவும், அவரது கூட்டாளியும் வந்ததா சொன்னதாக எனது கணவர் என்னிடம் சொன்னார். அவிங்க தான் கொன்னிருப்பாங்க னு என்னிடம் சொன்னார். ஒரு வாரத்திற்கு முன்பு விசு மாமா இல்லாத நேரம் வந்து போரார், ஆள் கூட்டிட்டு வாரார் எனக்கு பயமாக உள்ளது என்று என்னிடம் சொன்னார். மாமாவிடம் சொல்லி கண்டீசன் செய்ய சொல்லியிருக்றேன் என்று சொன்னார். எனது மருமகன் அமட்டி இருப்பார் போல. தம்பி நான் இருக்கும்போது வா, அந்த பிள்ளை தனியா இருக்கும்போது வராதா, அடுத்துவங்களை கூட்டிக்கிட்டு வரதா என்று விசுவைக் கண்டித்துள்ளார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

GH க்கு வந்த பிறகு நான், எனது வீட்டுக்காரர் எல்லாரும் வெங்கடேஷ் வீட்டிற்கு சென்ற விபரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் நான் போகவில்லை. வெங்கடேஷ் வீட்டிற்கு, எனது கணவர், வெங்கடேஷ்., எனது வீட்டுக்கார் ஆகியோர் சென்றார்கள். அங்கு சென்று பிள்ளைகளைப் பார்க்க போனார்கள். எனது வீட்டுக்காரரிடம் தான் சின்னப்பிள்ளை இந்த விபரங்களைச் சொன்னார். போலிசார் விசாரணையில் இந்த விபரங்களைச் சொன்னேனா என்றால் நான் போலிசாரிடம் பேசவேயில்லை. நான் எனது மகளிடம் போனில் இரண்டு நிமிஷம் பேசியிருப்பேன். விஸ்வநாததின் அப்பா மில்டரியில் இருந்து ரிட்டயர்டுஆனவர் என்றால் எனக்குத் தெரியாது. விஸ்வநாதனும் நல்லா படிச்சு வேலையில் இருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. விஸ்வநாதனின் வீடு நல்ல வசதியான வீடு, அவர் நல்லா படித்து

வேலையில் இருந்தார் அவர்களுக்கு பணத் தேவை இருந்தது இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அன்றைய தினம் நான் GH ல் இருந்தோம். எனது பேத்திகள் எனது மருமகள் வீட்டில் இருந்தார்கள். எனது மகன் பெயர் அசோக்குமார். அசோக்குமார் காஷ்மிர்பக்கத்தில் வேலை பார்த்தார். ஊர் பெயர் தெரியாது. கௌரி இறந்தது சம்பந்தமாக அவருக்கு தகவல் சொன்னோம். அவர் மறுநாள் வந்தார். போஸ்மார்ட்டம் செய்த அன்றே வந்துவிட்டார். போஸ்மார்ட்டம் செய்வதற்கு முன்பு போலிசார் கூட்டமாக விசாரித்தார்களா என்றால் போலிசாரும் அமைதியாக இருந்தார்கள், நாங்களும் அமைதியாக இருந்தோம். விஸ்வநாதனின் அம்மா, அப்பா எங்களுடன் GH ல் தான் இருந்தார்களா என்றால் அவர்கள் வரவில்லை. நான் பார்க்கவிலலை. திருமணத்திற்கு எனது மகளுக்கு எத்தனை பவுன் நகை போட்டோம் என்றால் எங்கள் கையில் இருந்ததை போட்டோம், பொண்ணுதான் வேண்டும் என்று கேட்டார்கள். சீர் வரிசை கேட்கவிலலை. நாங்களும் வெங்கடேசன் வீட்டாரும் 2 வருடங்களாக பேசிக்கொள்ளமாட்டோம். வெங்கடேசனும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் லவ் பண்ணார்கள், கல்யாணம் நாங்கள் பண்ணிவைத்தோம். எனது மருமகன் மதுரையில் வேலை பார்த்தார். கல்யாணம் முடிந்தவுடன் மதுரைக்கு வந்துவிட்டார்கள். அவர் எங்கு வேலை பார்த்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. எனது மருமகன் வீட்டில் தான் சாப்பிடுவார். எனது மருமகனுக்கு நிறை நண்பர்கள் உண்டு என்றால் அந்த விபரம் பற்றி எனக்குத் தெரியாது. அன்றைக்கு இரவு வெங்கடேசன் யாருடன் இருந்தார் என்றால் நாங்கள் GH ல் இருந்தோம். அவர் எங்கு இருந்தார் என்று தெரியாது. மறுநாள் எங்கள் ஊரில் இருந்து ஆட்கள் நிறைய பேர் வந்தார்கள் என்றால் அன்றைய இரவே வந்துவிட்டார்கள். எனது பேத்திகள் மறுநாள் எங்கு இருந்தார்கள் என்றால் எனது மருமகள் ஆஸ்பத்திரிக்கு கூட்டிவந்தார். எனது பேத்தி சொன்னதாக என்னிடம் சொன்ன விபரத்தை எனது கணவர் போலிசில் சொன்னாரா என்று எனக்குத் தெரியாது. எனது கணவர், எனது சம்பந்தகாரர் GH ல் இருந்து எனது மகள் வீட்டிற்கு சென்றார்கள். மகள்

வீட்டில் இருந்து GH க்கு நேராக வந்துவிட்டார்கள். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை